**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.22** |
| **Name** | **:** | **திரு. பெ. புகழ்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.10.2025.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2022ஆம் வருடம் நான் ஆரணி கிராமிய காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது, எனக்கு முன்னால் பணியிலிருந்த ஆய்வாளர் திரு. வி.ஜே.முத்துக்குமார் அவர்கள், விசாரணை மேற்கொண்ட அக்காவல் நிலைய குற்ற எண்.1238/2021, சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 506(ii) altered into 302 இ.த.ச. வழக்கு கோப்பினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

வழக்கு கோப்பினை பரிசீலினை செய்து எனக்கு முன்னர் மேற்கொண்ட விசாரணை மற்றும் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் சரியாக இருந்ததால் நான் எதுவும் சம்பவ இட மாதிரி வரைபடம் உள்ளிட்ட ஆவணங்கள் ஏதும் தயார் செய்யவில்லை. மேலும் எனக்கு முன்பு விசாரணை செய்த காவல் ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரணை செய்யவில்லை.

இவ்வழக்கில் எனது விசாரணையின் அடிப்படையில் கொலையுண்டதாக தெரிய வந்த புருஷோத்தமன் என்பவர் **20.10.2021** அன்று ஆரணி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பொழுது, விபத்து பதிவேடு தயார் செய்து முதல் சிகிச்சை வழங்கிய மருத்துவர் வித்யா அவர்களை **19.01.2022** அன்று விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

மேலும், அன்றைய தினமே, இவ்வழக்கில் தடய அறிவியில் துறை ஆவண எண்.LR/TOX.H/1384/2021, Dated:10.11.2021-ன் படி, ஆய்வறிக்கையைப் பெற்றேன். அந்த தடய அறிவியல் ஆய்வறிக்கை ஏற்கனவே அ.த.சா.ஆ.**12-**ஆக **15.11.2023** அன்று குறியீடுச் செய்யப்பட்டுள்ளது. அதேபோல், CHEM/701/2021, Dated:17.12.2021-ல் தடய அறிவியல் ஆய்வறிக்கையை பெற்றேன். அந்த தடய அறிவியல் ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.28-**ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. அந்த தடய அறிவியல ஆய்வறிக்கையை வழங்கிய திருமதி. கமலா என்பவரையும், மேலும், மருத்துவர் மகேந்தர் என்பவர், புருஷோத்தமன் என்பவரின் பிரேதத்தின் மீது உடற்கூராய்வு செய்து வழங்கிய சான்று எண்.**1153/2021** மற்றும் இறுதி கருத்துரை சம்மந்தமாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அதேபோல் CHEM/124/2022, Dated:20.05.2022-ல் வேதியியல் ஆய்வறிக்கை பெற்றேன். அந்த ஆய்வறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர்

திருமதி. ஆர். கமலா என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய ஆய்வறிக்கை குறித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த CHEM/124/2022, Dated:20.05.2022-ல் வேதியியல் ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.29**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

மேலும், உடற்கூராய்வின் போது மருத்துவரால் சேகரிக்கப்பட்ட புருஷோத்தமன் என்பவரது உடல் உள்ளுறுப்புகளை ஆய்வு செய்து ஆய்வறிக்கை VLR/Toxh/1384/2021-ன் படி அறிக்கை வழங்கிய வேலூர் சத்துவாச்சாரி, வட்டார தடய அறிவியல் அலுவலர் திரு. சீனிவாசன் என்பவரை விசாரணை செய்து அவரது வழங்கிய ஆய்வறிக்கை குறித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. எஸ். ஷாபூதின் மற்றும் பிரேத விசாரணை அலுவல் புரிந்த காவலர் திரு. சீனிவாசன் ஆகியோரையும் விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர், இவ்வழக்கின் விசாரணையை முடித்து திருவண்ணாமலை உதவி இயக்குநர், குற்ற வழக்குகள் தொடர்வு துறை, அவர்களிடம் வழக்கு கோப்பினை ஒப்புவித்து அவரிடம் மாதிரி இறுதி கருத்துரை பெற்றேன்.

அந்த இறுதி கருத்துரையின் அடிப்படையில், ஆஜர் எதிரியின் மீது 16.02.2022 அன்று இ.த.ச. பிரிவுகள் 294(பி), 302 ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆரணி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சிகள் வாக்குமூலங்கள் ரமேஷ், விஜயா, ஜெயா, சதீஷ், ஷாபூதின், காவலர்

எண்.2001 திரு. சீனிவாசன், மருத்துவர் ஆர். வித்யா, மருத்துவர் ஆர்.கமலா, மருத்துவர். திரு. மகேசந்திரன், அறிவியல் அலுவலர் திரு. சீனிவாசன் ஆகியோரது வாக்குமூலங்கள் நீதிமன்றத்தால் 01.06.2022 அன்று பெறப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான்.

மருத்துவர் திருமதி. கமலா என்பவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில், மேற்படி வழக்கில் கொலையுண்ட சுமார் 38 வயது மதிக்கத்தக்க ஆண் என்பவரின் எரிந்த நிலையில் உள்ள தோல் மற்றும் மாதிரி தோல்களை உரிய ஆய்விற்கு உட்படுத்திய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது,

We examined the above two (2) articles, but, did not detect Petrol, Kerosene, Diesel or other inflammable substance in any of the Item 1 or Item 2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் அளித்த வாக்குமூலமானது அவர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

திரு. ஷாபூதின் என்பவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில், அவர் புகார் வாக்குமூலம் பெற்று பதிவு செய்ததாகவும் மற்றும் அவர் புலன் விசாரணைக்கு உதவியாக இருந்ததாகவும் மட்டும் தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். அதை தவிர்த்து, அவர் தனிப்பட்ட முறையில் எந்த மருத்துவருக்கோ, நீதித்துறை நடுவர் அவர்களுக்கோ, உயர் அதிகாரிகளுக்கோ அறிக்கையோ அல்லது வேண்டுகோளோ அனுப்பியதாக என்னுடைய விசாரணையில் கூறியுள்ளதாக காணப்படுகிறா என்றால் வாக்குமூலத்தில் இல்லை, அப்பணிகள் புலன் விசாரணைக்கு உதவி செய்த வகையில் அவர் செய்திருக்கலாம்.

எனக்கு தெரிந்த வரையில் திரு. ஷாபூதின் என்பவர் எந்த உயர்

அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் கொடுத்ததாக தெரியவில்லை என்றால் சரிதான், ஆனால் அவர் கொடுத்திருக்கலாம். நான் எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் முத்துக்குமார் என்பவரை கு.வி.மு.ச. 161-ன் விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவர் பரந்தாமன் என்பவரை நான் விசாரிக்கவில்லை என்றாலும், அவரை சாட்சியாக குற்ற பத்திரிக்கையில் சாட்சிகள் பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சாட்சிகள் பட்டியலில் சேர்க்கவில்லை, ஆனால் அவர் கையொப்பமிட்டு வழங்கிய மரண வாக்குமூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் முதன் முதலாக நான் தான் மருத்துவர் வித்யா என்பவரை விசாரித்தேன் என்றாலும், அப்போது தான் விபத்து பதிவேடு அவர்களிடமிருந்து பெறப்பட்டது என்றால் முன்பே வாங்கி கோப்பிலிருந்த விபத்து பதிவேட்டின் அடிப்படையில் அன்றைய தினம் விசாரணை செய்தேன். ஏற்கனவே வாங்கப்பட்டிருந்த விபத்து பதிவேட்டை மறைத்து நான் விசாரணை செய்த அன்றைய தினம் புதியதாக ஒரு விபத்து பதிவேடு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

அதனால் தான் மருத்துவர் வித்யா என்பவர் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவ நேரத்தில் சம்பவம் நடந்த வீட்டில் இருந்த எதிரியின் மனைவியையோ, எதிரியின் பிள்ளைகளையோ அல்லது அ.சா.18 ரமேஷின் மனைவியையோ விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டுடன் காணப்பபடும் விவரச் சீட்டும் மருத்துவர் வித்யா என்பவரால் வழங்கப்பட்டது தான் என்றால் சரிதான்.

இறந்து போன நபரின் நண்பர்களான ஜெகதீசன், லாலா மற்றும் மோகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் எதுவும் என்னால் பதிவு செய்யவில்லை என்றால் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் சரியான முறையில் நான் புலன் விசாரணை செய்யாமல் தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளின் வாக்குமூலங்கள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள், வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைந்துள்ள இடத்திற்கு எல்லை வரம்பு நீதிமன்றம் எது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் சரியான முறையில் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரியின் மீது பொய்யாக இறுதி அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரே நாளில் பல சாட்சிகளை நான் விசாரித்தால் நான் சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இறந்தவர் தவறி விழுந்து அதனால் ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட மரணத்தினை நான் சரியான முறையில் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** - இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.